# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 435/2023** Date: 18.11.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 1** |
| Name | : | அசோக்குமார் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 18.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுக்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். 1ம் எதிரி எனது சித்தப்பா. 2 ம் எதிரி எனது சித்தி, 3 ம் எதிரி ரோகினி எனது சித்தப்பாவின் மருமகள், 4 ம் எதிரி கணேசன் எனது சித்தப்பாவின் மகன். கடந்த 03.06.2023 ம் தேதி காலை 10.40 மணிக்கு நான் எனது வீட்டிற்கு வெளியே இருந்தபோது எனது சித்தப்பா செல்வத்தின்மாடு எனது வீட்டிற்கு முன்னதாக காயப்போட்டிருந்த நெல்லை மாடு தின்றது. அதை பார்த்து நான் மாட்டை துரத்திவிட்டேன். அப்போது அங்குவந்த செல்வத்திடம் எதற்காக மாட்டை இப்படி மேயவிடுகிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு செல்வம் அப்படித்தான்டா மேய்ப்பேன், தேவிடியா பையா, கண்டாரஓலி பையா என்று திட்டினார். செல்வத்தின் மருமகள் ரோகினி நாங்கள் அப்படித்தான் விடுவோம், நீ யாரடா கேட்கரத்துக்கு என்று கூறினார். செல்வத்தின் மனைவி தனம் என்னை பார்த்து நாங்கள் அப்படித்தான்டா மேய்ப்போம், நீ யாருடா கேட்கரத்துக்கு என்று கூறினார். செல்வத்தின் மகன் கணேசன் நீ என்னடா கேட்கறது அப்படித்தான்டா செய்வோம் என்று கூறினார். பேசிக்கொண்டிருந்தபோது செல்வம் கீழே கிடந்த Helmet யை எடுத்து எனது வலது கால் முட்டியில் அடித்தார். அதே Helmet யை செல்வத்தின் மருமகள் ராகினி வாங்கி எனது இடது பக்க தோள்பட்டை மற்றும் இடது கால் முட்டியிலும் அடித்தார். செல்வம் ராகினி கையிலிருந்த Helmet யை வாங்கி என்னை பார்த்து கொல்லாமல் விடமாட்டேன் என மிரட்டினார். எனது மகன் பரமேஷ்வர் சாயை செல்வம் Helmet ல் இடது கால் முட்டியில் அடித்தார். ராகினி

செருப்பால் எனது மகன் பரமேஷ்வர் சாயின் இடது கன்னத்தில் அடித்தார். அதனால் என் மகனுக்கு இடது கண்ணில் இரத்தம் கட்டியது. எனது அப்பா கணேசன் சண்டையை விலக்கிவிட்டார். காயம்பட்ட நானும், எனது மகனும் எனது இருசக்கர வாகனத்தில் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்ந்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும்.** தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் Helmet ஆல் தான் செல்வம் மற்றும் ராகினி என்னையும், என் மகனையும் தாக்கினார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் செருப்பால் தான் ராகினி எனது முதுகிலும், எனது மகனை அடிக்க பயன்படுத்தியதாகும். **Helmet மற்றும் செருப்பு அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆகும்.** போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை – எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் செய்யப்படவில்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.11.18 15:08:15 +0530

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 435/2023** Date: 18.11.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 2** |
| Name | : | பரமேஷ்வர் சாய் |
| Father's Name | : | அசோக்குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 18.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேட்டுக்கொட்டாயில் குடியிருந்து 6 ம் வகுப்பு படித்து வருகிறேன். அசோக்குமார் எனது அப்பா. ஆஜர் 1 ம் எதிரி எனது தாத்தா. 2 ம் எதிரி தனம் எனது பாட்டி, 3 ம் எதிரி ராகினி எனது சித்தி, 4 ம் எதிரி கணேசன் எனது சித்தப்பா. சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒருநாள் சனிக்கிழமை காலை 10.40 மணிக்கு செல்வம் தாத்தாவோட மாடு எங்கள் வீட்டின் முன்னால் இருந்த நெல்லை மேய்ந்தது. அந்த மாட்டை பிடிப்பதற்காக செல்வம் தாத்தா, தனம், ராகினி, கணேசன் ஆகியோர் வந்தார்கள். என் அப்பா எதற்காக மாட்டை விடுறீங்க என்று கேட்டதற்கு நான்கு பேரும் நாங்கள் அப்படித்தான் விடுவோம், நீ என்ன கேக்குறது என்று கூறினார்கள். ராகினி எனது அப்பாவை கெட்டவார்த்தையால் பேசினார். செல்வம் தாத்தா Helmet ல் எனது அப்பாவின் வலது கால் முட்டியில் அடித்தார். ராகினி Helmet யை வாங்கி எனது அப்பாவின் இடது பக்க தோள்பட்டை மற்றும் இடதுகால் முட்டியில் அடித்தார். நான் தடுக்க போனபோது ராகினி எனது இடதுகால் முட்டியில் Helmet ல் அடித்தார். ராகினி செருப்பால் எனது இடதுபக்க கண்ணில் அடித்தார். அதனால் இடது பக்க கண்ணில் இரத்தம் கட்டியது. என் அப்பா காரில் என்னை தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் Helmet மற்றும் செருப்பு தான் எதிரிகள் பயன்படுத்தியது. போலிசார் நான் மருத்துவமனையில் இருந்தபோது என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை – எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் செய்யப்படவில்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.11.18 15:08:36 +0530

**<u>DEPOSITION OF WITNESS</u>**

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.1, DHARMAPURI.

**C.C. No: 435/2023** Date: 18.11.2025

**Prosecution Witness**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | **PW : 3** |
| Name | : | கணேசன் |
| Father's Name | : | அர்ஜீனன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Age | : | |
| Calling | : | |
| Religion | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 18.11.2025.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேட்டுக்கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது மகன், அ.சா.2 எனது பேரன். 1 ம் எதிரி எனது தம்பி. மற்ற எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 03.06.2023 ம் தேதி காலை 10.40 மணிக்கு நான் எனது வீட்டின் முன்னதாக நெல் காயவைத்திருந்தேன். எனது தம்பி செல்வத்தின் மாடு நெல்லை மேய்ந்தது. எனது மகன் மாட்டை பிடிக்க சென்றபோது ரோகினி எனது மகனை பார்த்து அப்படித்தான் விடுவோம் என்று கூறினார். செல்வம் எனது மகனை பார்த்து கண்டாரஓலி மகனே, தேவிடியா மகனே என்று திட்டினார். தனம் மற்றும் கணேசனும் எனது மகனிடம் தகராறு செய்தார்கள். செல்வம் Helmet ஆல் எனது மகனின் வலதுகால் முட்டியில் அடித்தார். ரோகினி எனது மகனின் இடதுதோள்பட்டை, இடது கால் முட்டியில் அடித்தார். எனது பேரனை ரோகினி செருப்பால் இடதுகண்னில் அடித்தார். ரோகினி எனது பேரனை Helmet ஆல் தோள்பட்டையில் அடித்தார். காயம்பட்ட எனது மகனும், பேரனும் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு காரில் சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை – எதிரிகள் தரப்பில் வாய்ப்பளித்தும் செய்யப்படவில்லை.**

TAMIL ARASU A

Digitally signed by TAMIL ARASU A
Date: 2025.11.18 15:08:44 +0530